

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 169 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 16 – வெள்ளிக்கிழமை 30 ஜனவரி 2026 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 169 : Thiruvalluvar Year - 2057 - Thai 16 - Friday 30 January 2026 - Chennai 16 Pages ₹ 5.00


## ஜவுளி நிறுவனங்களின் நெசவு, பின்னலாடைத் தொழில்களுக்கு

# நவீன இயந்திரங்களைக் கொள்முதல் செய்ய 20% மானியம்!

### கோவை – சர்வதேச ஜவுளித் தொழில் மாநாட்டில்

### முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி உரையில் அறிவிப்பு!



சென்னை, ஜன. 30 -

**"ஜவுளி நிறுவனங்கள் நெசவு, பின்னலாடைகளுக்கு நவீன இயந்திரங்களைக் கொள்முதல் செய்ய இருபது சதவிகித மூலதன முதலீட்டு மானியம் வழங்கப்படும்" என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கோவையில் நடைபெற்ற "முதலாவது சர்வதேச ஜவுளித் தொழில் மாநாடு 360"-ல் காணொலியில் உரையாற்றும் போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.1.2026) முகாம் அலுவலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக கோயம்புத்தூர் மாநகரின் கொடீசியா வளாகத்தில், தமிழ்நாடு அரசின் துணிநூல் துறை மற்றும் இந்திய தொழில் கூட்டமைப்பு ஆகியவை இணைந்து நடத்தும் "முதலாவது சர்வதேச ஜவுளித் தொழில் மாநாடு 360"இல், ஆற்றிய உரை வருமாறு:-

தொழில் வளத்திற்கும் புதுமையான கண்டுபிடிப்புகளுக்கும் புகழ்பெற்ற தென்னிந்தியாவின் மான்செஸ்டரான கோவையில், சர்வதேச ஜவுளித் தொழில் மாநாடு முதன்முறையாக நடைபெறுவதில் மகிழ்ச்சியடைகிறேன்! இந்தியாவின் இரண்டாவது பெரிய பொருளாதாரம் கொண்ட மாநிலம் நம்முடைய தமிழ்நாடு. அதுவும், தமிழ்நாட்டின் தனிச்சிறப்பு என்னவென்றால் இங்கு சமூகநீதியும் காப்பாற்றப்படுகிறது; அனைத்து மாவட்டங்களையும் உள்ளடக்கிய பரவலான வளர்ச்சியையும் சாதித்து காட்டிக்கொண்டு இருக்கிறோம்!

**தமிழ்நாட்டிற்குப் பெருமை!**

அதனால்தான், நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், ஆட்டோமொபைல், ஐ.டி., காலணி உற்பத்தி, மின்னணுப் பொருட்கள் உள்ளிட்ட பல துறைகளிலும் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்திருக்கிறது!

அதுவும், ஜவுளித்துறையை பொறுத்தவரையில், ஆயத்த ஆடை ஏற்றுமதியில் தொடர்ந்து 5 ஆண்டுகளாக, 'இந்தியாவின் மிகப்பெரிய ஏற்றுமதி யாளர்' என்ற பெருமையை தமிழ்நாடு பெற்றிருக்கிறது.

இந்தியாவின் ஜவுளி வணிகத்தில் தமிழ்நாட்டின் பங்கு மட்டும் 33 விழுக்காடு! நேரடியாக, 31 இலட்சம் தொழிலாளர்களுக்கு தமிழ்நாட்டின் ஜவுளித்துறை வேலைவாய்ப்பு வழங்குகிறது. இதில், 60.12 விழுக்காடு பெண் தொழிலாளர்கள் என்பது கூடுதல் சிறப்பம்சம்.

**மாநாட்டின் முக்கிய நோக்கங்கள்!**

நம்முடைய திராவிட மாடல் ஆட்சி அமைந்ததும் துணிநூல் துறை என்று தனித் துறையையே உருவாக்கினோம். தொழில்நுட்ப ஜவுளித்துறையில் முதலீடுகளை ஈர்க்க சென்னை மற்றும்

கோவையில் இரண்டு கருத்தரங்குகளை நடத்தினோம். இப்படி, பல முயற்சிகளை எடுத்து இந்த துறையின் வளர்ச்சிக்கு உழைக்கும் அமைச்சர் ஆர்.காந்தி அவர்களுக்கும், துறை அதிகாரிகளுக்கும் என்னுடைய பாராட்டுகள்! வாழ்த்துக்கள்!


தொடர்ச்சி 3-ஆம் பக்கம்







உத்தமர் காந்தியடிகள் - தோழர் ஜீவா

திருவுருவச் சிலைகளுடன் நினைவு அரங்கம்

வீறுகவியரசர் முடியரசன்

திருவுருவச் சிலை திறப்பு விழா

மற்றும்

தவத்திரு குன்றக்குடி அடிகளார்

நூற்றாண்டு விழா

தலைமை

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்



உத்தமர் காந்தியடிகள் – தோழர் ஜீவா நினைவு அரங்கம்

நேரம் : மாலை 6.30 மணி
இடம் : சிராவயல்




தவத்திரு குன்றக்குடி அடிகளார் திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்துதல்

நேரம் : இரவு 7.15 மணி
இடம் : குன்றக்குடி



வீறுகவியரசர் முடியரசன் திருவுருவச் சிலை

நேரம் : இரவு 8.00 மணி
இடம் : காரைக்குடி

நாள் : 30.1.2026, வெள்ளிக்கிழமை

வெல்வோம் ஒன்றாக !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in

வெளியீடு : இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை-600 009

செ.ம.தொ.இ./111/வரைகலை/2026